Registered as a News Paper மக்கங்கள் 04 விலை ரூபா: 5-00


# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 27 (11-01-1993) திங்கட்கிழமை ஓசை 828

## வாணிபம் / தொழில் பதிவுச்சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தமது வாணிபம்/தொழில் முயற்சிகளைப் பதிவு செய்ய விண்ணப்பித்தவர்கள், வாணிபம்/தொழில் பதிவுச் சான்றிதழ்களைப் பின்வரும் நாட்களில் காலை 9 00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிக்கு மிடையில் யாழ்ப்பாணம், கந்தர் மடத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். சான்றிதழ்கள் உரிமையாளர்களிடம் மட்டுமே கையளிக்கப்படுமென்பதைக் கவனத்திற் கொள்ளுமாறும் பின்வரும் (4ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய சந்திப்பின்போது தலைவர் பிரபாகரனுடன் தென்னிந்திய திருச்சபையின் ஆயர் அம்பலவாணர், ஆங்கில திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னாண்டோ, கத்தோலிக்க திருச்சபையின் ஆயர் அதிவண. சௌந்தரநாயகம் ஆகியோர் காணப்படுகின்றனர்.



ஆங்கிலத் திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னாண்டோவை தலைவர் பிரபாகரன் வரவேற்கும் போது எடுக்கப்பட்ட படம்.

# கிறிஸ்தவ திருச்சபைகளின் ஆயர்களை தலைவர் பிரபாகரன் சந்தித்து பேசினார்

## சமாதான, நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கம் பற்றி கலந்தாலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்துள்ள ஆங்கில திருச்சபையின் ஆயர் வணக்கத்திற்குரிய கென்னத் பெர்னாண்டோ, கத்தோலிக்க திருச்சபையின் யாழ்ப்பாண ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம், தென்னிந்திய திருச்சபையின் ஆயர் வணக்கத்திற்குரிய அம்பலவாணர்

## இன்று மாபெரும் வெகுஜன போர் நல்லூரில் பேரணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்கள் மீது சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு அடக்குமுறைகளைக் கண்டித்து இன்று

எதிர்பார்க்கப்படுகிறது இப்பேரணியில் கலந்து கொள்ளும் மக்களின் வசதிகருதி அனைத்துப் பகுதிகளுக்கும் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றது. (ஈ)

## இராணுவ அட்டூழியங்களை

# தலைவர் பிரபாகரன் சந்தித்து பேசினார்

## சமாதான, நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கம் பற்றி கலந்தாலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்துள்ள ஆங்கில திருச்சபையின் ஆயர் வணக்கத்திற்குரிய கென்னத் பெர்னாண்டோ, கத்தோலிக்க திருச்சபையின் யாழ்ப்பாண ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம், தென்னிந்திய திருச்சபையின் ஆயர் வணக்கத்திற்குரிய அம்பலவாணர் ஆகியோரை தலைவர் பிரபாகரன் நேற்று சந்தித்துப் பேசினார். சுமார் இரண்டரை மணி நேரம் வரை இக் கலந்துரையாடல் நடைபெற்றது. யாழ். குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியான பிரச்சினைகள், பூநகரி பாதை விவகாரம், சமாதான சூழ்நிலையை உருவாக்குவது போன்ற பல விடயங்கள் இப்பேச்சுக்களில் இடம்பெற்றன.

நேற்று மாலை 7 மணியிலிருந்து 9-30 மணிவரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதில் மூன்று ஆயர்களுடன், ஆங்கில திருச்சபையைச் சேர்ந்த வண. டாக்டர் ரெஜினி பெரேரா, வண நேசக்குமார், டாக்டர் ஜெயதுலராசா, கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த குருமுதல்வர் அருட்கலாநிதி வண. இம்மானுவேல் தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த புதிதாக நியமனம் பெற்ற ஆயர் வண ஜெபநேசன். வண. ஜெயநேசன் ஆகியோரும் விடுதலைப்புலிகளின் தரப்பில் தலைவருடன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், கடற்படை சிறப்புத் தளபதி சூசை, யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி தமிழ்ச்செல்வன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இக் கலந்துரையாடலின் பின்னர் தலைவர் மூன்று ஆயர்களுடன் தனித்தனியாகவும் பேச்சுக்களை நடத்தினார்.

இச்சந்திப்பின்போது யாழ்ப்பாண மக்கள் மீது அரசாங்கம் திணித்துள்ள பொருளாதாரத் தடைகள் பற்றியும்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## இன்று மாபெரும் வெகுஜன போர் நல்லூரில் பேரணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்கள் மீது சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு அடக்குமுறைகளைக் கண்டித்து இன்று யாழ். குடா நாட்டில் மாபெரும் கண்டனப் பேரணியும் மறியல் போராட்டமும் நடைபெறவுள்ளது.

இக்கண்டனப் பேரணியையும் மறியல் போராட்டத்தையும் தமிழீழத்தின் பல்வேறு வெகுஜன அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. இன்று காலை 10-00 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் இப்பேரணியில் லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது இப்பேரணியில் கலந்து கொள்ளும் மக்களின் வசதிகருதி அனைத்துப் பகுதிகளுக்கும் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றது. (க)

## இராணுவ அட்டூழியங்களை சர்வதேசசமூகத்திற்கு கூறுக

“சிறிலங்கா பேரினவாத அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவரும் கொடுமைகளையும், இராணுவ அட்டூழியங்களையும் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்”. இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் கொழும்பு அங்கலிக்கன் திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. இன்று யாழ். குடாநாட்டில் நடைபெற இருக்கும் சிறிலங்கா அரசின் அடக்குமுறைகளைக் கண்டிக்கும் கண்டனப் பேரணியை முன்னிட்டு மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

## இரு சிங்கள யுத்தக் கைதிகளை விடுவிக்க தலைவர் இணக்கம்

### அங்கிலிக்கன் ஆயர் கூட்டிச்செல்வார்

(யாழ்ப்பாணம்)

சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நல்லெண்ண முயற்சியாக விடுதலைப்புலிகளின் காவலிலுள்ள யுத்தக் கைதிகளான இரு சிங்களப் பொலிசாரைவிடுதலை செய்ய தலைவர் பிரபாகரன் முன் வந்துள்ளார்.

சமாதானத்திற்கு வழிகோலும் நல்லெண்ண முயற்சியாக புலிகள் தம் வசமுள்ள யுத்தக் கைதிகள் இருவரை விடுதலைசெய்ய வேண்டுமென ஆங்கில திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னாண்டோவின் வேண்டுகோளைத் தொடர்ந்தே இருபொலிசாரை விடுதலை செய்ய தலைவர் பிரபாகரன் ஒப்புக் கொண்டுள்ளார்.

மேலும் ஆயர் கென்னத் பெர்னாண்டோ, புலிகளிடம் காவலிலுள்ள பொலிசாரை இன்று சந்திப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் காவலில் 40 சிறிலங்காப் பொலிசாரும், ஒரு இராணுவச் சிப்பாயும் இருப்பது தெரிந்ததே.

### வேவு விமானம் நோட்டம்

(சுன்னாகம்)

வலிகாமத்தின் பல பாகங்களையும் சிறிலங்கா விமானப படையினரின் வேவு விமானம்

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

### உயர்தர பெறுபேறுகள்

(கொழும்பு)

க. பொ. த (உயர்தரம்) பரீட்சையின் பெறுபேறுகள் வடமாகாண கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் மூலமாக அனுப்பிவைக்கப்பட விருப்பதாகத் தெரியவருகின்றது. தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் திரு. இ. சுந்தரலிங்கம் யாழ்ப்பாணம் வரும்போது யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை எடுத்து வருவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## இனப் பிரச்சினைக்கு தீர்வு அரசே முன்வைக்க வேண்டும்

### - தலைவர் பிரபா

[யாழ்ப்பாணம்]

“எங்கள் அரசியல் இலட்சியம் என்ன என்பது சகலரும் அறிந்தவிடயம். நாடுபிரிவதை அரசாங்கமும் பெரும்பான்மை சிங்கள மக்களும் விரும்பவில்லையானால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் உருப்படியான தீர்வுத் திட்டம் ஒன்றை முன் வைப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்” இவ்வாறு நேற்று நடந்த சந்திப்பின் போது ஆங்கில திருச்சபையின் ஆயர் அதிவண. கென்னத் பெர்னாண்டோவிடம் தலைவர் பிரபாகரன் தெரிவித்தார்.

மேலும், ஒருபுறம் யுத்தத்தைத் தொடர்ந்து கொண்டு மறுபுறம் பேச்சுக்களை நடத்த அரசு விரும்புவதாக சுட்டிக்காட்டிய தலைவர் பிரபாகரன் சமாதான சூழ் நிலையை உருவாக்கிய பின்னரே பேச்சுக்களை நடத்துவது சாத்தியம் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் தமிழர் தாயகத்தை துண்டாடும் தீர்வுத்திட்டம் எதையும் தமிழ் மக்கள் அங்கீகரிக்க மாட்டார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## நாளை கிளிநொச்சியில் வெகுஜனப் பேரணி

(கிளிநொச்சி)

தமிழீழ மக்கள் மீது சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் படுகொலைகள், ஆக்கிரமிப்புகள் என்பவற்றைக் கண்டித்து நாளை கிளிநொச்சியில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை நடாத்துவதற்கு வெகுஜன ஒன்றியம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது

இக்கண்டனப் பேரணி நாளை காலை 10-00 மணிக்குகிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியிலிருந்து ஆரம்பித்து இவி நாச்சிமகாவித்தியாலயம் வரை செல்லவுள்ளது.

அத்துடன் கிளிநொச்சிமாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

இப்போராட்டத்தில் அனைத்து மக்களையும் கலந்து கொண்டு சிறிலங்கா அரசிற்கு எமது ஏகோபித்த எதிர்ப்பைக் காட்டவேண்டும் என வன்னி மாவட்ட வெகுசன ஒன்றியம் கேட்டுள்ளது.

இதுகுறித்து வன்னி வெகுஜன ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தமிழீழ மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் கொடிய யுத்தத்தை உடன் நிறுத்தி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் எனவும் இனப்பிரச்சினைக்கு நீதியான நிரந்தரமான சமாதானத்தீர்வு காண வேண்டும் எனவும் தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கைவிடப்பட்டுள்ளது மேலும் கிளாலி கடற்பகுதியிலும் தென் தமிழீழத்திலும் சிறிலங்கா அரசு நடாத்திவரும் திட்டமிட்ட தமிழினவேட்டை நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அத்துடன் இக்கண்டனப்

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## கூட்டுப்படை தலைமையகம் அநுரதபுரத்திற்கு மாற்றம்

சிறிலங்கா கூட்டுப்படைகளின் தலைமையகம் கொழும்பிலிருந்து அநுரதபுரத்திற்கு விரைவில் மாற்றப்படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் மனோதிடம் இழந்திருக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கு உற்சாகமூட்ட முடியும் என சிறிலங்கா படையினர் கருதுகின்றனராம்.

அத்துடன் அநுரதபுரத்தில் கூட்டுப்படை தலைமை அலுவலகத்தை அமைப்பதன் மூலம் படையினருக்கு கட்டளையிடுவது சுலபம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

**கடிகாரமா? றேடியோவா?**

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284. ஸ்ரான்லி வீதி. (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (சி-5679)

**அராலியூரரின் நாடகங்கள்**

அராலியூரரின் வானொலி நாடகங்களை பலரும் மேடையில் நடித்து விட்டனர். மாணவர்களும் நடிப்பதற்கேற்றவை நடித்தால் சிரித்து மகிழலாம். 1. கெட்டிக்காரர்கள். 2. முதலாம்பிள்ளை 30/-, இலக்கியப் பரிசுபெற்ற 19 நாடகங்கள். (3243)

**உண்டியலில் திருட்டு**

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில் உள்ள விநாயகர் ஆலயத்தில் உள்ள உண்டியல்கள் இரண்டு கடந்த புதன்கிழமை இரவு உடைக்கப்பட்டு சிறு தொகைப்பணம் திருடப்பட்டுள்ளது. (22)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | தமிழீழ மண்ணில் |
|---|---|
| 04 | 24 |
| – | – |
| 06 | 12 |
| – | – |
| 1970 | 1991 |

**வீரவேங்கை சீராளன்**

(முருகேசு வரதன்) [ரஞ்சன்]

திதி: 11-01-1993

சுடுதலும் குளிரும் உயிருக்கு இல்லை
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லையென முழங்கி
விடுதலைக்குப் பரணி பாடிய வேங்கைகளே
உங்களின் பாதையில் தொடர்கிறோம்
இலட்சியத்தை வென்றெடுக்க ......

★ 24-12-1991 அன்று புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் அவருடன் வீரச்சாவெய்திய கப்டன் வாணன, வீரவேங்கை இளம்பரிதி ஆகியோருக்கும் எமது வீர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பலகாடு, அப்பா, அம்மா, சகோதரர்கள்
காரைநகர். அத்தான்மார், மருமக்கள்.

தற்போதைய முகவரி:
8/2, அரசடி ஒழுங்கை,
ஐயனார் வீதி, யாழ்ப்பாணம். (சி-5753)

## வாழி ஊழி ஊழி என்று வாழ்த்துவோம்

வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் பழைய மாணவரும், யா/சேர். வை. து ம ம. வித்தியாலயத்தின் மாணவராக, ஆசிரியராக, அதிபராக, வேலணைக் கொத்தணி அதிபராக படிப்படியாக உயர்ந்தும், சமய, சமூக விடயங்களில் அதிக அக்கறைகொண்டு உழைத்தும், பல மாணவர் பரம்பரைகளை உருவாக்கியும் கல்வித் தொண்டாற்றி இன்று 11-01-1993 இல் கல்வி உலகில், அரச சேவையில் இருந்து ஓய்வு பெறும் திருவாளர் பொன்னையா கேதாரநாதன் அவர்கள் நீடுவாழ்கவென்று எல்லாம் வல்ல அவரின் குல தெய்வமான வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையாரின் பாதார விந்தங்களை வணங்கி வாழ்த்துவோம்.

அவர்களின் அன்பையும், ஆசியையும், ஆதரவையும், வழிகாட்டலையும் "சைவப் பிரகாசம்" என்றும் வேண்டி நிற்கும்,

**வாழ்க வளர்க ஓங்குக**

யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், பட்டப்படிப்புகள் கல்லூரி, யாழ்ப்பாணம். [3969]

"சைவப் பிரகாசம்" அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் பா. அ. ச, பா. அ. சபை, ப. மா. சங்கம்

## 41-ம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்: 26. 06 1971

வீரச்சாவு: 02. 12. 1992

**2-ம் லெப். குலமகள் (ஜெமிலா)**

(முருகையா மாலா)

அளவெட்டி

நித்தமும் வேட்டுச்சத்தம் கேட்பது வீட்டுப்பக்கம்
சிங்கள சிப்பாய்களிடம் சிக்குண்ட பூமியை
சிறை மீட்பதற்காய் புலிப்படையுடன்
மாலாவே நீ! புறப்பட்டாய் வளலாய் மண்ணிலே
வரலாறு படைத்த போரிலே சிங்களப் படைகளை
சிதறி ஓடவைத்தாய் அந்த மண்ணிலேயே
மரணத்தை அணைத்து மாவீரர் ஆனாய்
உன் ஆத்ம சாந்திக்காக அஞ்சலியை செலுத்துகின்
-றோம்.


ஓம் சாந்தி!

11-01-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

றீகன் நகர் உன் பிரிவால் வாடும்
யாழ்ப்பாணம். அப்பா, அம்மா, சகோதரர்கள்,
(3951) உற்றார், உறவினர்கள்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

1993



## 41-ம் நாள் நினைவஞ்சலி



## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 04 - 10 - 1940

உதிர்வு: 12 - 12 - 1992

1993



தாயின் மடியில்
1963-09-26

தாயகமண்ணில்
1990-01--11

விடுதலைப்புலிகளின் மகளிர் படைப்பிரிவின்

முதலாவது தளபதி

# மேஜர் சோதியா

(அமல உற்பவவசந்தி மைக்கல்பிள்ளை) நெல்லியடி, கரவெட்டி.

மாதருள் ஜோதியே சோதியா
மாய்ந்தனை நீ யென்று யார் சொன்னார்
மானிட இதயங்கள் உனை நினைக்கும்
மாதர் படை நின் வழி தொடரும்
தரணியில் தமிழீழம் மலர்வ துறுதி
தமிழ்ப் படை அதனை விரைந்து பெறும்
தாயுடன் சேய்களும் மகிழ்வுடனே
தமிழீழத் தாய் நாட்டில் குதுகலிக்கும்

உன்பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா தம்பி, மச்சாள் மாமா, மாமி,
அம்மம்மா ரெனி. இயக்க நண்பர்கள், பெண் போராளிகள்.

[சி/5754]



## கடற்புலி கப்டன் நிமலன்

[அந்தோனிப்பிள்ளை அருள்மரியராசா]
மயிலிட்டித்துறை (யோகா)

மயிலை மண்ணில்
வீரஜனனம்
21-04-1871

வன்னி மண்ணில்
வீரச்சாவு
02-12-1992

தாயகம் தமிழீழம் காணவேண்டித்
தன்னுயிரை அர்ப்பணித்த தியாக வீரன்
மானமே உயிராக மதித்த வீரன்
மண் மீட்புப் போர் புகுந்த வேங்கை வீரன்
வீரமுடன் நடந்தாய்
விடுதலைப் பாதையிலே
வேகமுடன் நடந்தாய்
அஞ்சிடோம் எதிரிக்கு
எம மண்ணில் இடம் கொடோம்
என்று எண்ணி அர்ப்பணித்த வீரா
புறப்பட்டாய் படையோடு
சீற்றம் கொண்டது உன் துப்பாக்கி ரவைகள்
படையினர் மாண்டனர் வீழ்ந்தன அரண்கள்
காவிய நாயகனாய் கனிந்து வரும் வேளையிலே
வீழ்ந்தது உன் உடல் பிரிந்தது உன் உயிர்
நான் பெற்ற செல்ல மகனே நிமலன்
நீ சரித்திரத்தில் என்றுமே நிலைத்திருப்பாய்
நீ நினைத்த தமிழீழத் தாயகம் மலரும்.

இன்று (திங்கட்கிழமை) காலை 6.15 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் நினைவு அஞ்சலியிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகளையும், நண்பர்களையும், உறவினர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

தற்போதைய வசிப்பிடம்
மணல் ஒழுங்கை,
பருத்தித்துறை.

[3978]

தந்தை தாய், சகோதரர்,
சகோதரிகள், மச்சான்,
மச்சாள், மருமக்கள்.



10
-
1940

உதிர்வு :
12
-
12
-
1992

## திருமதி நித்தியானந்தமங்களம் (பேபிஅக்கா) துரைரத்தினம் (சாண்டோ)

உங்களுக்கு மீளா துயில் அம்மா
எங்களுக்கு ஆறாத் துயர் தாயே

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டும், சகல விதமான உதவிகளை செய்தவர்களுக்கும் எங்கள்மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

சவனாய், புலோலிகிழக்கு
பருத்தித்துறை.

கணவன், பிள்ளைகள்
(3970)

## நினைவு கூருகின்றோம்
## 1993-01-11

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட-பால் வியாபாரியான - பாவற்குளத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சுகவீனம்காரணமாக எமைப் பிரிந்த -
லின்டன் (மனுவேல் சூசைப்பிள்ளை - கன்னாட்டி, அடம்பன் - மன்னார்)

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - புங்குடுதீவுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -
லெப். தாத்தா / ரத்தினம் (வைரமுத்து நவரத்தினம் - 'கற்பகச்சோலை', புங்குடுதீவு கிழக்கு -யாழ்.)

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம்-வல்வெட்டித்துறை ஊறணிப் பகுதியில் மூளைக்காய்ச்சல் நோயின் காரணமாக எமைப் பிரிந்த -
மகளிர் படையணியின் முதலாவது தளபதியான,
மேஜர் சோதியா (அமலஉற்பவ வசந்தி மைக்கல் - தபாற்கந்தோர் வீதி, நெல்லியடி, கரவெட் மேற்கு - யாழ்ப்பாணம்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5751]

### சிந்தனைக்கு

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

- ஔவையார்


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாண 11-01-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05


# ‘சார்க்’ அமைப்பு தேவைதானா?

தென்னாசியப் பிராந்திய நாடுகளுக்கிடையில், பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைப்பு ஒன்று தேவைதானா? உலகின் பல பிராந்தியங்களிலும் இராணுவ, பொருளாதார ஒத்துழைப்புக்களுக்கென அமைப்புக்கள் உருவாக்கப்பட்டதும், அவற்றால் பரஸ்பரம் அந்நாடுகள் நன்மைஅடைந்ததும்உண்டு. இந்த வரிசையில் அமைக்கப்பட்ட தென்னாசிய பிராந்திய நாடுகளின் அமைப்பான ‘சார்க்’ அமைப்பு எந்தளவிற்கு பரஸ்பர நட்பையும், ஒத்துழைப்பையும் வளர்த்துள்ளது என்று எழுந்துள்ள கேள்வியே ‘சார்க்’ அமைப்பு ஒன்று தேவைதானா என்ற வினாவை எழுப்பியுள்ளது.

டாக்காவில் கடந்தமாத ஆரம்பத்தில், நடைபெற இருந்த ஏழாவது சார்க்உச்சி மாநாடு இரண்டாவது தடவையாக மீண்டும் ஒரு முறை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் அயோத்தியில் ஏற்பட்ட பாபர்மசூதி தகர்ப்பைத்தொடர்ந்து, இந்தியாவிலும், அதன் அண்டை நாடுகளான பாகிஸ்தானிலும், பங்களாதேஷிலும் நடைபெற்ற சம்பவங்களே இம்மாநாடு மீண்டும் காலவரையறையின்றி ஒத்திவைக்கக் காரணமாக அமைந்துள்ளன.

தென்னாசியப் பிராந்திய நாடுகள் இன்றுமட்டுமல்ல, இந்நாடுகள் ‘சுதந்திரமடைந்த’ காலத்தில் இருந்தே முரண்பாடுகளை வளர்த்து வந்துள்ளன. சில நாடுகள் இராணுவ ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் பலதடவை மோதியும் உள்ளன. இப்பிராந்தியத்திலுள்ள ஏழுநாடுகளில் பெரும்பாலானவை எப்பொழுதும் ஒன்றை ஒன்று சந்தேகக்கண் கொண்டே பார்க்கின்றன.

இந்தியா-பாகிஸ்தான், இந்தியா-பங்களாதேஷ், நேபாளம் - பூட்டான் இவற்றின் உறவுகள் தற்பொழுதும் ஒரு மோசமான கட்டடத்திலேயே உள்ளன. சிறிலங்கா -இந்தியா, நேபாளம் - இந்தியா, இவற்றிற்கான உறவுகளும் ஓர் ஒழுங்கான சீரமைப்பில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்நாடுகளுக்கு இடையிலான உறவுகள் இவ்

க.பொ. த. [உயர்தரம்] பரீட்சை

## பெறுபேறுகளை மீளாய்வு செய்ய போதனாசிரியர்கள் மறுப்பு

(கொழும்பு)

அண்மையில் கொழும்பில் வெளியான க.பொ.த(உயர்தரப்) பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வுசெய்யும்வேலைகளை பொறுப்பேற்பதில்லை என்று பல்கலைக்கழக போதனாசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதுஅறுபது சதவிகித சம்பளஉயர்வு கோரிப் போராட்டம் நடத்திவரும் பல்கலைக்கழகப் போதனாசிரியர்கள் இந்த சம்பள உயர்வு கிடைக்கும்வரை இந்தப்பணியை பொறுப்பேற்ப தில்லை என முடிவுசெய்திருப்பதால்மீளாய்வுப் பணிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதாககூறப்பட்டுள்ளது. பரீட்சைப் பெறுபேறுகள் மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பம் செய்வதற்கு இம்மாதம் 25-ம் திகதி இறுதி நாள் என்பது குறிப்பிடத்தக்கது.

## லெப். கேணல் வேணு மற்றும் மூவரின் முதலாமாண்டு நினைவு நிகழ்வு

வங்காலை மாதிரிக் கிராமத்தில் 6-1-92 அன்று எதிர்பாராத விதமாக இடம்பெற்ற வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். கேணல் வேணு, மேஜர் குகன், மேஜர் சயந்தன், கப்டன் குட்டிமணி ஆகியோரது முதலாமாண்டு நினைவு தினக் கூட்டம் கடந்த புதன்று தட்சணா மருதமடு விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் தட்சணா மருதமடுப் பிரதேசப் பொறுப்பாளர் இளையவன், லக்ஸ்மன், மகளிர் அமைப்பை சேர்ந்த செல்வி செந்தணல், மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் கணேஸ் உட்பட பலரும் உரையாற்றினர். இந் நிகழ்ச்சியை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டதுடன் ‘‘உறங்காத கல்லறைகள்’’, ‘‘புதுயுகம் படைத்திடுவோம்’’, ‘‘மண்ணில் பூத்த மாவீரர்கள்’’ என்னும் தலைப்பிலான கலை நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சம்பள முற்பணகடன்வழங்க 5 மில்லியன் கோரிக்கை

ஆசிரியர் சம்பள முற்பணக் கடன்களைவழங்க வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சிடம் ரூபா 5 மில்லியன் தொகையை யாழ். கல்வித் திணைக்களம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் வட-கிழக்கு மாகாணகல்வி அமைச்சில் இருந்து யாழ்ப்பாணம் வரும் உயரதிகாரிகள் இவ்விடயம் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் தமது தனிப்பட்ட விடயம் தொடர்பாகவே வந்து போவதனால் ஆசிரியர் மற்றும் கல்வித் திணைக்கள ஊழியர்களின் சம்பள முற்பணங்கள் இதுவரை வழங்கப்படாமல் தேங்கி இருப்பதாகவும் யாழ். கல்வித் திணைக்கள கடன் சபை தெரிவித்துள்ளது. (17)

## ஒருலட்சம் நட்டஈடுகோரி உச்சநீதிமன்றில் மனு

(கொழும்பு)

பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு சுமார் ஒரு மாதம் வரையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமைக்காக ஒரு லட்சம் ரூபா நட்ட ஈடாகத் தர பட வேண்டுமெனக் கோரும் மனுவொன்றை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாப்பகூவ தொகுதி அமைப்பாளர் எம். பி. பி. ஏக்கநாயக்கா தாக்கல் செய்துள்ளார்.

உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம் மனுவில் மாகோ பிரிவு பொலிஸ் சுப்பிரிண்டன்ட் எடிசன் குணதிலக்கா, மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர் என்பதற்காகவே தான் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதாகவும் இதனால் தனக்கு நடக்கவிருந்த திருமணம் பிற்போடப்பட்டதாகவும் இதற்கான இழப்பீட்டுத் தொகையை அரசு தரவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அயோத்தி விவகாரத்தில்

# இராணுவ வெற்றி என்பது முட்டாள் தனமான நம்பிக்கை

[கண்டி]

நாட்டின் அபிவிருத்தித் துறையைப் போல் சமாதானத்துக்கான தேடலிலும் புதிய அணுகுமுறையும், புதிய சிந்தனையும் அவசியம். நாட்டின் இறைமையையும், ஐக்கியத்தையும் விட்டுக்கொடுக்க எவரும் தயாராகவில்லை. எப்படியாயினும் நாம் எதார்த்தமான ஒரு தீர்வைத் தேட வேண்டும். காலம் கடந்த சிந்தனை மற்றும் நெகிழும் தன்மை அற்றஅணுகுமுறை, இராணுவ கீர்த்தி பெறுவதில் மூடத்தனமான நம்பிக்கை ஆகியனவற்றால் மிகுந்த சர்ச்சைக்குரிய எமது இனப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் அது தொடர்ந்து நீர் வடியும் புண்ணைப்போல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இவ்வாறு கண்டி ஆயர் அதி வண. வின்னி பெர்னாண்டோ தெரிவித்தார்.

கண்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பங்கு கொண்ட பூசைப்பலியில் ஆயர் வின்னி பெர்னாண்டோ வழங்கிய பிரசங்கத்தில் இவ்வாறு கூறினார்.

அவர் தனது பிரசங்கத்தில் ஜனாதிபதி பிரேமதாசா நாட்டின் பாரிய பிரச்சினைக்குரிய காரணங்களை மாத்திரமல்ல அதற்கான அடிப்படைக் காரணங்களை அறிந்து அவற்றிற்கான தீர்வை எட்ட முயற்சிக்கிறார். எமது தேசத்தை பிடித்துள்ள இந்தத் துன்பத்தைக் களைய இந்த நாட்டிலுள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும்,

வடக்கு - கிழக்கு தீர்க்கப்படாத பிரச்சினையால் எமது இதயங்களில் ஏற்படும் வருத்தங்களை வெளிப்படுத்தாமல் இருக்க முடியாதுநிரந்தரமான சமாதானத்தையும், இனப் பிரச்சினைக்குத் தீர்வையும் நாம் எதிர்பார்க்கிறோம். இதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் என்றும்,

இந்தக் காரியத்தைச் செய்வதற்கு அமைப்பில் மாற்றம் வேண்டும். ஆயினும் இந்த இலக்கை அடைவதற்குஅமைப்பில் மாற்றத்தை விட அணுகுமுறையில் மாற்றம் பிரதானமானது. வாழ்க்கையில் மக்கள் பல இன்னல்களைச் சந்திக்கிறார்கள். பெரும்பான்மையான மக்கள் அதிகாரப் பரவலாக்கல் நன்மை பயக்கும் என விரும்பினால் எமது அரசியல் தலைவர்களும். பொதுநிலைத் தலைவர்களும் மக்களின் விருப்பத்துக்குப் பணிந்து போகவேண்டும் என்றார்.

ஜனாதிபதி பதவி ஏற்று நான்காவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் சமய வைபவம் கண்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றபோது அதி வண. ஆயர் வின்னி பெர்னாண்டோ தமது நீண்ட பிரசங்கத்தில் இக் கருத்துரையை வழங்கினார்.

## வட-கிழக்கு யுத்தத்தினால் பல சிங்கள உயிர்கள் பலி

- பௌத்தபிக்கு கவலை

(கொழும்பு)

நாடும், வீடும் யுத்தத்தில் சிக்கி தவிக்கும்போது அதனை பொருட்படுத்தாது இளைஞர்கள் வேடிக்கை நிகழ்ச்சிகளிலும், கேளிக்கைகளிலும் பங்கு கொள்வது மிகவும் வேதனை தரும் விடயம் என கரந்தெனிய பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மாகல சோமானந்த தேரோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் வடக்கு கிழக்கு யுத்தம் உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளை பல சிங்கள பௌத்த உயிர்களை பலி கொண்டு செல்கின்றது இந்த யுத்தம். இந்த யுத்தத்தைவிட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் பல வீடுகளில் பட்டினிச்சாவு ஏற்பட்டுள்ளது. இந்த இரு காரணங்களினாலும் எமது மக்களின் மரணத்தை தடுக்க அரசு தவறி, மாறாக இளைஞர்களின் வேடிக்கை நிகழ்ச்சிக்கு ஊக்கம் அளிக்கின்றது என்றார்.

அரசாங்கம் மக்களை தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றது என மேலும் அவர் தெரிவித்தார்.

## “போர் முரசு கொட்டுவோம்” தெருக்கூத்து

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா படைகளின் அண்மைக்கால நிலைப்பாடு பற்றியும், இராணுவம் நடாத்துகின்ற திட்டமிட்ட அழிப்பு நடவடிக்கைகள் பற்றியும் எமது சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கு சிங்கள இராணுவத்திற்கு எதிராகப் போரிட தமிழ் மக்கள் அனைவருமே இணைந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்கியும் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழக தீவகப் பிரிவினரால் ‘போர் முரசு கொட்டுவோம்’ என்னும் தெருக்கூத்து தற்போது யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் தீவக மக்கள் தங்கியிருக்கும் முகாம்களிலும் பரவலாக நடாத்தப் பட்டு வருகின்றது. (22) (86)

## கஷ்டங்களைத் தாங்குவோம் இறுதி வெற்றி எமக்கே

லண்டனில் சுவாமி சித்ரூபானந்தாதெரிவிப்பு

(லண்டன்)

இன்றைய கஷ்டங்களை நாம் தாங்கிக் கொண்டிருந்தால் இறுதியில் எமக்கு வெற்றி கிடைக்கும். வடக்கில் என்ன நடக்கிறது என்பது கொழும்பில் இருப்பவர்களுக்குத் தெரியாது. உண்மைகள் திரித்துக் கூறப்படுகின்றன. இவ்வாறு சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார்.

அண்மையில் லண்டனுக்கு விஜயம் செய்தபருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத் தலைவர் லண்டனில் சர்வதேச தமிழ்மன்றத்தில்பேசும் போது இவ்வாறு கூறினார்.

1984 இல் இருந்து மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். முதலில் சிறிலங்காப் படை எம்மை தாக்கியது. பின்னர் இந்திய அமைதி காக்கும் படை எம்மைத் தாக்கியது. மறுபடியும் சிறிலங்காப் படை எம் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளது. தரை, கடல், ஆகாயமென மும்முனைத் தாக்குதல் எம் மீது நடத்தப்படுகிறது. இதனால் பலர் வீடுவாசல்களை இழந்து அநாதைகளாகவும், விதவைகளாகவும் உள்ளனர். தமிழனின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக அரசு மெல்ல மெல்லத் தமிழர்களைக்கொலை செய்கின்றது.

சார்க் அமைப்பு ...

[illegible] காரணமாக அமைந்துள்ளன.

தென்னாசியப் பிராந்திய நாடுகள் இன்றுமட்டுமல்ல, இந்நாடுகள் 'சுதந்திரமடைந்த' காலத்தில் இருந்தே முரண்பாடுகளை வளர்த்து வந்துள்ளன. சில நாடுகள் இராணுவ ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் பலதடவை மோதியும் உள்ளன. இப்பிராந்தியத்திலுள்ள ஏழுநாடுகளில் பெரும்பாலானவை எப்பொழுதும் ஒன்றை ஒன்று சந்தேகக்கண் கொண்டே பார்க்கின்றன.

இந்தியா-பாகிஸ்தான், இந்தியா-பங்களாதேஷ், நேபாளம் - பூட்டான் இவற்றின் உறவுகள் தற்பொழுதும் ஒரு மோசமான கட்டத்திலேயே உள்ளன. சிறிலங்கா -இந்தியா, நேபாளம் - இந்தியா, இவற்றிற்கான உறவுகளும் ஓர் ஒழுங்கான சீரமைப்பில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்நாடுகளுக்கு இடையிலான உறவுகள் இவ்வாறு மோசமான ஒரு கட்டத்தை அடைவதற்கு ஒரு நாட்டின் உள்விவகாரத்தில் மற்றைய நாடு நேரடியாகவும் மறைமுகமாகவும், இராணுவ ரீதியிலும், இராஜதந்திர ரீதியிலும் தலையிடுவதே காரணமாக இருந்துள்ளது. இந்தியாவில் இயங்கும் தீவிரவாத இயக்கங்களுக்கு பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆயுதவிநியோகம் செய்வதும், பாகிஸ்தான், பங்களாதேஷில் இயங்கும் தீவிரவாதிகளுக்கு இந்தியா ஆயுதவிநியோகம் செய்வதும், இலங்கை, நேபாளம், பூட்டான் ஆகியநாடுகளின் விவகாரங்களில் இந்தியா இராஜதந்திர தலையீடுகள் செய்ய முற்படுவதும், பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகள் தமது உள்நாட்டுவிவகாரங்கள் தீவிரமாகும்போது அவற்றை திசைதிருப்ப இந்தியாவுடனான முரண்பாட்டைத் தீவிரமாக்குவதும். இந்நாடுகளுக்கு இடையில் உறவுகள் மோசமடைவதற்குக் காரணமாகின்றன.

இறுதியாக அயோத்தியில் நடந்த பாபர் மசூதி தகர்ப்பு இந்நாடுகளுக்கிடையிலான பிரச்சினையை மேலும் தீவிரமாக்கியுள்ளது. பாபர்மசூதி இடிக்கப்பட்டதை தமக்கு சாதகமாக்கி அரசியல் ஆதாயம் தேட பாகிஸ்தானும், பங்களாதேசும் முற்பட்டமை 'சார்க்' அமைப்பின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கியுள்ளது. பாபர்மசூதி இடிக்கப்பட்டமை நியாயப்படுத்த முடியாத ஒன்று என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பங்களாதேசிலும், பாகிஸ்தானிலும் இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டதும் இந்துக்கள் கொல்லப்பட்டமையும் அதே போன்று நியாயப்படுத்த முடியாதவையே ஆகும். அத்தோடு, பாகிஸ்தான் பாராளுமன்றத்திலும், பங்களாதேஷிலும் இந்திய அரசிற்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் இந்நாடுகளுக்கு இடையிலான எதிர்கால உறவைப்பற்றி எதுவித சிந்தனையுமின்றி செய்யப்பட்டவையே ஆகும்.

இந்நிலையில் 'சார்க்' அமைப்பின் எதிர்காலம் குறித்து கேள்வி எழுவது நியாயமானதே. பெயரளவில் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு ஒன்று இருப்பதினால் லாபம் எதுவுமில்லை, செலவீடுதான் மிஞ்சும். திட்டமிட்டவாறு ஒரு மாநாட்டை நடத்த ஒற்றுமையாகச் செயற்பட முடியாத இந்நாடுகளினால் பிராந்திய அபிவிருத்திக்கென எதனை திறம்படச் சாதித்துவிட முடியும்?

## உச்சநீதிமன்றில் மனு

(கொழும்பு)

பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு சுமார் ஒரு மாதம் வரையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமைக்காக ஒரு லட்சம் ரூபா நட்ட ஈடாகத்தர பட வேண்டுமெனக் கோரும் மனுவொன்றை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாப்பகூவ தொகுதி அமைப்பாளர் எம். பி. பி. ஏக்கநாயக்கா தாக்கல் செய்துள்ளார்.

உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம் மனுவில் மாகோ பிரிவு பொலிஸ் சுப்பிரிண்டன்ட் எடிசன் குணதிலக்கா, மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர் என்பதற்காகவே தான் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதாகவும் இதனால் தனக்கு நடக்கவிருந்த திருமணம் பிற்போடப்பட்டதாகவும் இதற்கான இழப்பீட்டுத் தொகையை அரசு தரவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யும், இராணுவம் நடாத்துகின்ற திட்டமிட்ட அழிப்பு நடவடிக்கைகள் பற்றியும் எமது சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கு சிங்கள இராணுவத்திற்கு எதிராகப் போரிட தமிழ் மக்கள் அனைவருமே இணைந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்கியும் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழக தீவகப் பிரிவினரால் 'போர் முரசு கொட்டுவோம்' என்னும் தெருக்கூத்து தற்போது யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் தீவக மக்கள் தங்கியிருக்கும் முகாம்களிலும் பரவலாக நடாத்தப்பட்டு வருகின்றது. (22) (86)

(லண்டன்)

இன்றைய கஷ்டங்களை நாம் தாங்கிக் கொண்டிருந்தால் இறுதியில் எமக்கு வெற்றி கிடைக்கும். வடக்கில் என்ன நடக்கிறது என்பது கொழும்பில் இருப்பவர்களுக்குத் தெரியாது. உண்மைகள் திரித்துக் கூறப்படுகின்றன. இவ்வாறு சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார்.

அண்மையில் லண்டனுக்கு விஜயம் செய்தபருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத் தலைவர் லண்டனில் சர்வதேச தமிழ்மன்றத்தில்பேசும் போது இவ்வாறு கூறினார்.

1984 இல் இருந்து மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். முதலில் சிறிலங்காப் படை எம்மை தாக்கியது. பின்னர் இந்திய அமைதி காக்கும் படை எம்மைத் தாக்கியது. மறுபடியும் சிறிலங்காப் படை எம் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளது. தரை, கடல், ஆகாயமென மும்முனைத் தாக்குதல் எம் மீது நடத்தப்படுகிறது. இதனால் பலர் வீடுவாசல்களை இழந்து அநாதைகளாகவும் ,விதவைகளாகவும் உள்ளனர். தமிழனின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக அரசு மெல்ல மெல்லத் தமிழரைக்கொலை செய்கின்றது.

அயோத்தி விவகாரத்தில்

## மூன்று அம்சத் திட்டத்திற்கு ஜனதாதள் எதிர்ப்பு

(டில்லி)

அயோத்தியா விவகாரத்தில் மத்திய அரசு முன்வைத்துள்ள மூன்று அம்சத் திட்டம் எல்லா நெறிமுறைகளுக்கும் முரணானது என்று ஜனதாதளம் கூறியுள்ளது.

அக்கட்சி மேலும்கூறுகையில்; அரசியலமைப்பின் 138ஆவது பிரிவின்கீழ்தான் குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத்தை அணுகியிருக்க வேண்டுமெனவும், அயோத்தியில் நிலத்தை கையகப்படுத்தும் அவசரச் சட்டத்தையும் அரசியலமைப்பின் 143ஆவது பிரிவின்கீழ் அணுகியிருக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது.

## அகமதாபாத் கலவரத்தில் 24 பேர் பலி; 68 பேர்காயம்

(டில்லி)

குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் நகரில் நேற்று முன்தினம் மூண்ட கலவரங்களில் இருபத்தி நான்கு பேர் கொல்லப்பட்டதாகவும், அறுபத்தெட்டு பேர் வரையில் காயமடைந்ததாகவும் கூறப்படுகின்றது

வன்முறையில் ஈடுபட்ட கும்பலைக் கலைப்பதற்காக பொலிசார் நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட கண்ணீர்ப் புகைக் குண்டுகளை பிரயோகித்ததாகவும், நாற்பதுக்கும் மேற்பட்ட வேட்டுக்களைத் தீர்த்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பதற்றம் நிலவுவதாகவும், பொலிசாரின் ரோந்துப் பணி அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை பம்பாய் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கலகத்தில் ஈடுபடுவோரைக் கண்டவுடன் சுடும்படி இராணுவத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும் இராணுவத்தின் பதின்மூன்று அணிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே மகாராஷ்டிரா மாநிலத்தின் இப்போதைய அரசு அண்மைய கலவரங்களையடுத்து கலைக்கப்பட வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

## இராமேஸ்வரம் கடலில் கடத்தல் அதிகரிப்பாம்

[சென்னை]

இராமேஸ்வரம் கரையில் இருக்கும் மீனவர்கள் கடத்தல் நடவடிக்கையில் ஈடுபடுவதாக தமிழக காவல்துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

பொலிசார், மற்றும் சுங்கத் திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்புடனேயே கடத்தல்காரர்கள் நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும், இந்தியாவில் இருபது ரூபாவுக்கு வாங்கப்படும் ஒரு லீற்றர் பெற்றோலை ரூபா அறுநூறு வரையிலும் எட்டு ரூபாவுக்கு வாங்கப்படும் ஒரு லீற்றர் டீசலை ரூபா நூற்றைம்பது வரையிலும் விற்பனை செய்வதாகவும், மேலும் கூறப்படுகிறது

# சார்க் அமைப்பு குறித்து இந்திய அரசு அதிருப்தி

[டில்லி]

சார்க் அமைப்பின் எதிர்காலம் தொடர்பாக இந்தியா பலத்த சந்தேகம் கொண்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய வானொலி நேற்று ஒலிபரப்பிய செய்தி ஒன்றின் மூலமாக இது தெரிய வந்துள்ளது.

டிசம்பர் ஆறாம் திகதியன்று அயோத்தியாவில் இடம்பெற்ற பாபர் மசூதி தகர்ப்பு சம்பவத்தையடுத்து பாகிஸ்தானிலும், பங்களாதேஷிலும் நடந்த சம்பவங்களால் இந்தியா கசப்புற்றிருப்பதாகவும், இந்தியாவின் உள்விவகாரத்தில் அயல் நாடுகள் அனாவசியத் தலையீடு செய்வதாக இந்தியா கருதுவதாகவும் கூறப்படுகின்றது

இதேவேளை பாகிஸ்தானும் பங்களாதேசும் இந்தியாவிற்கு எதிரான செயற்பாடுகள் குறித்து உடன்பாடு ஒன்றை எட்டியிருப்பதாகவும் இந்தியா அச்சம் கொண்டிருக்கின்றது. இந்தியாவின் வெளியுறவுத் துறை இணை அமைச்சர்களான ஆர்.எல். பாட்டியா, எட்வார்டோ பெலய்ரோ ஆகியோர் காட்மண்டு, திம்பு, கொழும்பு நகரங்களில் இது தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும் சார்க் அமைப்பின் அமைப்பு விதிகளில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென பாகிஸ்தான் பிரதமர் பத்திரிகையாளர்களிடம் திரும்பத் திரும்பக் கூறி வருவதும் இந்தியாவிற்கு விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

அயோத்தி சம்பவங்களை கண்டித்து பாகிஸ்தான் பாராளுமன்றமும், பங்களாதேசின் தேசிய அசம்பிளியும் விவாதங்கள் நடத்தியிருப்பதும், தீர்மானம் நிறைவேற்றியிருப்பதும் தெரிந்ததே.

## தூதுவரகம் மீது தாக்குதல்

(காபூல்)

ஆப்கான் தலைநகர் காபூலில் இருக்கும் பாகிஸ்தானிய தூதரகத்தின் மீது நடத்தப்பட்ட ராக்கெட் தாக்குதலில் மூன்று குழந்தைகள் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் சண்டையிடும் போட்டிக் குழுக்களுக்கு இடையிலான மோதலின் போதுதான் பாகிஸ்தானின் தூதுவரகத்தின் மீதும் ராக்கெட் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## மத்திய அரசின் திட்டத்தை முஸ்லிம்கள் எதிர்க்க வேண்டும்

முஸ்லிம் லீக் வேண்டுகோள்

(டில்லி)

அயோத்தி விவகாரத்தில் மத்திய அரசு மேற்கொள்ளும் நடைமுறைகளை அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் வன்மையாக எதிர்க்க வேண்டுமென அனைத்திந்திய முஸ்லிம் லீக் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் நடத்திய அவசரக்கூட்டத்தின் பின்னர் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை பிரதமர் நரசிம்மராவை சந்தித்த முஸ்லிம் எம். பிக்களின் தூதுக்குழுவொன்று மகாராஷ்டிரா மாநில அரசைக்கலைக்கவேண்டுமெனவும். பம்பாய் நகரத்தை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டுமெனவும் கோரியுள்ளது.

## எகிப்து, டூனிசியாவுடனான எல்லைகளை லிபியா மூடியது

(திரிபோலி)

லிபியா எகிப்துடனும், டூனிசியாவுடனுமான தனது எல்லைகளை நேற்று முன்தினம் மூடியுள்ளது. ஐ. நா. லிபியாமீது விதித்திருக்கும் பொருளாதாரத் தடைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே எகிப்துடனும் டூனிசியாவுடனுமான தனது தரைப் போக்குவரத்து எல்லைகளை லிபியா மூடியுள்ளது. இதைத் தொடர்ந்து எகிப்து எல்லையிலும், டூனிசியாவின் எல்லையிலும் பனிக் குளிருக்கு மத்தியில் நூற்றுக்கணக்கான வாகனங்கள் தரித்து நிற்பதாகக் கூறப்படுகின்றது.

## யூனிட்டா வீழ்ச்சி

[லுவாண்டா]

அங்கோலாவில் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த யூனிட்டா படைகளின் தலைமையகத்தை அரசுப்படைகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது

ஈழநாதம்

# பௌத்த மதம் தற்பொழுது அரசியல் மயமாகிவிட்டது

## - அருட். கலாநிதி ரியன்ஸி பெரேரா

(யாழ்ப்பாணம்)

தெற்காசியாவில் சமயம் பெரிதாக்கப்படுகிறது. ஆனால் சமயத்தில் உணர்வுகள் போற்றப்படுவதில்லை. பௌத்தத்தின் அடித்தளத்தில் ஆட்டம் ஏற்பட்டுள்ளது போதி பூசை உதவி செய்யாது. பௌத்தம் இப்போது அரசியல் மயமாகிவிட்டது. சமயங்களில் தீர்க்க தரிசனம் பரிமாணம் இப்போது இல்லை. உங்களைப் போல் தென்பகுதியிலும் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளார்கள். ஒடுக்கப்பட்ட தென்பகுதிதான் ஜே. வி. பி. யின் தளமாக அமைந்தது என கிழக்காசிய தேசிய மன்றச் செயலாளரான அருட் கலாநிதி ரியன்ஸி பெரேரா தெரிவித்தார்.

நற்சுமுக நடுநிலையத்தில் நேற்று மாலை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கருத்தரங்கிற்கு குரு முதல்வர் அதி. வண கலாநிதி எஸ். கே. இம்மானுவேல் தலைமைதாங்கினார். அருட் திரு கலாநிதி ரியன்ஸி மேலும் பேசுகையில்;

"தெற்கில் சமயப் பூசல் இப்போது நிலவி வருகிறது. ஏழைகளுக்குப் பணம் கொடுத்து மதமாற்றம்செய்வதாகப் பௌத்த சமயத்தவர் கிறிஸ்தவ சமயத்தின் மேல் சந்தேகம்கொண்டுள்ளார்கள். தெற்கில் கிறிஸ்தவசமயத்தை விரிவாக்க முயற்சி நடப்பதாக நம்பப்படுகிறது. அதில் உண்மை இல்லாமலும் இல்லை. சிலகுழுக்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளன. அதனால் ஒரு காரியத்தை மேற்சொள்ளும் போது பௌத்த சங்கத்தினரைச் சம்பந்தப்படுத்தி அவர்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டியுள்ளது.

"பௌத்த சமயவாதிகளுடன் இணைந்துதான் நாம் சில காரியங்களைச் சாதிக்க வேண்டியுள்ளது. அப்படிச் செய்யாவிட்டால் எல்லாம் குலைந்துவிடும். பௌத்தமும், கிறிஸ்தவமும் அடக்குமுறைச் சூழலில்தான் தோன்றியவை. ஆனால்இன்று மல்வத்தபீடம் மரபு ரீதியான ஒரு நிறுவன அமைப்பாக மாறிவிட்டது. பௌத்த பிக்குகளின் இளம் தலைமுறையினர் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள். சிங்கள பௌத்தம் என்று ஒன்றும் இல்லை. அது இந்தியாவில் இருந்துவந்தது என்கிறார்கள்.

பிக்குகள் சிலர் மனம் மாறியுள்ளார்கள் ஹிக்கடுவவில் ஒரு பிக்கு தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள விகாரைகளில் உள்ள பிக்குகளுக்குத் தமிழ் படிப்பிக்க முன்வந்துள்ளார். ஹெல உறுமயவுடன் தமிழர் பிரச்சினை குறித்து நாம் பேச்சு வார்த்தை நடத்தினோம். அவர்கள் சமஷ்டி என்ற சொல்லைக் கேட்டே அஞ்சுகிறார்கள். சுவிஸ் கன்ரன்கள் போல் நிர்வாகம் அமையலாம் என்கிறார்கள்.

அரசுடன் நாம் பொருளாதாரத்தடை, போக்குவரத்தடை, உணவு மற்றும் மருந்து பற்றிப் பேசினோம். அரச அதிகாரிகள் தரவுகளையும், கோவைகளையும் காட்டி உணவு வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்கிறார்கள்.

இவ்வளவு காலமும் சிறுபான்மையினர் விடயத்தில் அரசியல் விளையாட்டில் ஈடுபட்டிருந்த சுதந்திரக் கட்சியும், யு. என். பி. யும் இப்பொழுது தமிழர் விவகாரத்தில்மாத்திரம ஒத்தகருத்தைக் கொண்டிருக்கின்றன. இராணுவ டலத்தைப் பற்றிப் பேசி

உ

அகில இலங்கைக்

கம்பன் கழகம் வழங்கும்

## மகர யாழ் விருது

எமது கழகம் வருடந்தோறும் நடாத்தும் கம்பன் விழாவில் இவ்வாண்டு முதல், தேர்ந்தெடுக்கப்படும். ஒருவருக்கு மேற்படி மகரயாழ் விருதினை வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

இவ் விருதுக்குத் தெரிவு செய்யப்படுபவருக்கு ரூபா பதினையாயிரம் (15, 000/-) கொண்ட பணமுடிச்சும், தங்கப்பதக்கமும் வெள்ளியிலான மகரயாழ் விருதும் முதல் நாள் கம்பன் விழாவில் வழங்கப்படும்.

தாம் சார்ந்த துறையினூடு தியாக உணர்ச்சியோடும், இனப்பற்றோடும், மனிதாபிமானத்தோடும் இம்

## சுவாமிவிவேகானந்தர் தேசிய தினம்

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தர் தேசியதினம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4-00 மணிக்கு உரும்பராய் சுபீட்ச நூலக மண்டபத்தில் இடம் பெற உள்ளது, இந்நிகழ்ச்சியில் பருத்தித்துறை சிறி சாரதா சேவாச்சிரம சுவாமி ஜீசித்ரூபானந்தா சொற்பொழிவாற்றுவார். இன்னிசை நிகழ்ச்சியும் இடம் பெறும்.

## வீரச்சாவு



கப். முத்துச்செல்வன் (ஆனந்தகுமார்)



லெப். இளமாறன் (சூரியகுமார்)

மணலாறு கொக்குத்தொடுவாயில் நேற்றுமுன்தினமிரவு 7 30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலில் இரண்டு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த கப்டன் முத்துச்செல்வன் / ஆனந்தகுமார் [குஞ்சன் மதியழகன், ஆலங்கேணி, பூநகரி]. லெப்டினன்ட் இளமாறன் / சூரியகுமார் (தேவராசா சதீஸ்தரன் ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப்

# பரீட்சை விடைத்தாள்கள் 3- வது அதிகாரி பொறுப்பில்

(வடமராட்சி)

"குமண" கப்பலில் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பரீட்சை விடைத்தாள்களுக்கு பொறுப்பாக மூன்று கல்வித்திணைக்கள அதிகாரிகள் இதுவரை நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

முன்னர் விடைத்தாள்களுடன் கப்பலில் திருக்கோணமலை வரை சென்று திரும்பிய கல்வி அதிகாரி திரு. ச. சண்முகராசாவிற்கு சுகவீனம் ஏற்பட்டதாக நேற்று முன் தினம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடமராட்சிக் கல்விக்கோட்டத்திலிருந்து திரு. மனுநீதி கப்பலுக்கு அனுப்பப்பட்டார். நேற்று அவருக்கும் சுகவீனம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கல்வி அதிகாரி திரு. பொன்னையா தெரிவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறியோர், ஒவ்வொரு புதன்கிழமையிலும் பிற்பகல் 3.00 மணி தொடக்கம் 3 30 மணி வரையும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் முற்பகல் 9 30 மணி தொடக்கம் 10 00 மணி வரையும், நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் மீட்புநிதி செலுத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

## வேவு விமானம்

(சீபிளேன்) ஒன்று தாழப் பறந்து பேரிரைச்சலுடன் நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

நேற்றுக்காலை 8 00 மணியிலிருந்து சுமார் அரை மணி நேரமாக ஏழாலை. கட்டுவன், தெல்லிப்பழை யாழ். நகர். மற்றும் அராலி ஆகிய பகுதிகளை சுமார் நான்கு ஐந்து தடவைகள் சுற்றி வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றுள்ளது. இதற்கிடையில் பலாலி விமானத்தளத்திற்கும் தென்பகுதிக்குமிடையேயும் அடிக்கடிவிமானங்கள் பறந்து திரிந்த வண்ணமிருந்தன

(11) (05) (21)

## கிறிஸ்தவ

இராணுவம் மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல் பற்றியும் தலைவர் பிரபாகரன் ஆங்கிலத் திருச்சபையின் ஆயரிடம் எடுத்து விளக்கினார்.

பூநகரிப் பாதையைத் திறந்துவிடும் விவகாரம் பற்றி கலந்துரையாடியபொழுது சமாதான சூழலை உருவாக்கும் நல்லெண்ண முயற்சியாக அரசாங்கம் பூநகரியிலுள்ள படைகளை வாபஸ்பெற்று பாதையைப் பொதுமக்களுக்குத் திறந்துவிடவேண்டும் என தலைவர் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணக்குடாநாட்டிற்கான தரைவழிப் பாதைகளை இராணுவம் தடைசெய்திருப்பது புலிகளின் போக்குவரத்தைப் பாதிக்கவில்லை என்றும் பொதுமக்களே இதனால்பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

## மீனவர் மீது சூடு

அராலிக் கடலில் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் மீன் பிடிப்பதற்காக வள்ளங்களில் சென்ற மீனவர்கள் மீது காரைநகரில் உள்ள ஊரி என்னும்இடத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர்சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் அவர்கள் கரைதிரும்ப நேர்ந்தது. (07)

## வயிற்றுளைவு

திருக்கை மீன் கறியுடன் மதிய உணவு உண்ட 5 பேர் வைத்தியசாலையில் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர்களுக்கு வயிற்றோட்ட நோய்க்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# பிரேமாவுடன் விவாதிக்க அத்துலத்முதலி விருப்பம்

## உயிருக்கு உத்தரவாதம் வேண்டுமாம்

"எமது உயிருக்கு உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில் நாமும்தொலைக்காட்சி விவாதத்துக்குத் தயாராக உள்ளோம்" இவ்வாறு நவசமசமாஜக்கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்காராவும் ஜனநாயக ஐ தே. க. தலைவர்கள் காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஸ் குணவர்தன ஆகியோரும் கருத்து தெரிவித்துள்ளனர்

ஜனாதிபதி சுதந்திர கட்சித் தலைவிக்கு பொருளாதாரத் துறையில் மட்டும் ரூபவாகினியில் விவாதம்செய்ய வருமாறு அழைத்ததைத் தொடர்ந்து இவர்களும் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

# பம்பாய் கலவரத்தில் 115 பேர் பலி; பலர் காயம்

(டில்லி)

இந்தியா. பம்பாய் நகரில் பொலிசார், இராணுவம் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கலவரத்தில் ஈடுபடுவோரை கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து நாட்களாக பம்பாயில் இடம் பெற்றுவரும் இந்து – முஸ்லிம் இனக் கலவரங்களால் 115 பேர் பலியாகியுள்ளனர். பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கலவரம் நகருக்கு வெளியிலும் பரவியுள்ளது. கலவரங்களை அடக்கும் நடவடிக்கை குறித்து இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் பம்பாய் சென்றுள்ளார்.

மேலும் இந்தக் கலவரத்தை சிவசேனா. பாரதீய ஜனதா கட்சி என்பன முன்னனின்று நடாத்துவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் முஸ்லிம்கள் பாகிஸ்தானிலிருந்து ஆயுதங்களைப் பெற்று அந்த ஆயுதங்களின் மூலம் இந்துக்களை தாக்குகின்றனர் என சிவசேனா அமைப்பின் தலைவர் போல் தங்கரே அறிவித்துள்ளார்.

## நாளை

பேரணிக்கு தமிழீழ காவல் துறையினரின் கிளிநொச்சி கோட்ட காவல் துறையினர் பாதுகாப்பு அளிக்க உள்ளனர்.

(16)

# 41-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்: 10



வீரச்சாவு: 02

அகில இலங்கைக்
கம்பன் கழகம் வழங்கும்

# மகர யாழ் விருது

எமது கழகம் வருடந்தோறும் நடாத்தும் கம்பன் விழாவில் இவ்வாண்டு முதல், தேர்ந்தெடுக்கப்படும். ஒருவருக்கு மேற்படி மகரயாழ் விருதினை வழங்கிக் கெளரவிக்கவுள்ளது.

இவ் விருதுக்குத் தெரிவு செய்யப்படுபவருக்கு ரூபா பதினையாயிரம் (15, 000/-) கொண்ட பணமுடிச்சும், தங்கப்பதக்கமும் வெள்ளியிலான மகரயாழ் விருதும் முதல் நாள் கம்பன் விழாவில் வழங்கப்படும்.

தாம் சார்ந்த துறையினூடு தியாக உணர்ச்சியோடும், இனப்பற்றோடும், மனிதாபிமானத்தோடும் இம் மண்ணுக்காய்த் தொண்டாற்றி, எமது இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரையே இவ் விருதுக்காகத் தேர்ந்தெடுப்பதென எமது கழகம் முடிவு செய்துள்ளது.

இத்தகைய சான்றோரின் பெயர், விபரங்களை பொது மக்களும், சமூக நிறுவனங்களும் சிபார்சு செய்து கீழ்க்கண்ட எமது முகவரிக்கு எதிர்வரும் 1993.02 15க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

விருது பற்றிய இறுதியான முடிவு கழக அறிஞர் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

சிபார்சுகள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேற்புறத்தில் ''மகரயாழ் விருதுக்கான சிபார்சு-1993'' எனக் குறிப்பிடவும்.

நன்றி!

''கம்பன் புகழ்பாடிக்
கன்னித் தமிழ் வளர்ப்போம்.''

தி. திருநந்தகுமார் — தலைவர்
க. குமாரதாசன் — செயலர்

அகில இலங்கைக் கம்பன்கழகம்
"கம்பன் கோட்டம்"
300, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி/5746)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சொர்ணம்மா

இடைக்காடு என். எஸ் சுப்பிரமணியம் சொர்ணம்மா காலமாகிவிட்டார். அவர்களின் ஈமக்கிரியைகள் நேற்று (10-01-93) மாலை 3 மணிக்கு நீர்வேலி மயானத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தகவல்:

கார்த்திகை இல்லம்,
கோப்பாய் வடக்கு,
பூதர்மடம்.

கணவன் என். எஸ். சுப்பிரமணியம்
(இடைக்காடு)

(சி 5755)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதப்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கன்ரன்கள் போல் நிர்வாகம் அமையலாம் என்கிறார்கள்.

அரசுடன் நாம் பொருளாதாரத்தடை, போக்குவரத்து தடை, உணவு மற்றும் மருந்து பற்றிப் பேசினோம். அரச அதிகாரிகள் தரவுகளையும், கோவைகளையும் காட்டி உணவு வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்கிறார்கள்.

இவ்வளவு காலமும் சிறுபான்மையினர் விடயத்தில் அரசியல் விளையாட்டில் ஈடுபட்டிருந்த சுதந்திரக் கட்சியும், யு. என். பி. யும் இப்பொழுது தமிழர் விவகாரத்தில்மாத்திரம ஒத்தகருத்தைக் கொண்டிருக்கின்றன. இராணுவ பலத்தைப் பற்றிப் பேசினாலும் இந்தக் கட்சிகள் அரசியல் தீர்வையே விரும்புகின்றன என்றார்.

நாம் எதனையும் பெற்றுத் தருவதாக நம்பிக்கை தெரிவிக்க முடியாது. எம்மால் ஆனவரை முயற்சிக்கிறோம். நாம் பேச வரவில்லை. உங்களிடம் இருந்து கேட்கத்தான் வந்தோம் என்றும் தெரிவித்தார்.

அ. சந்தியாப்பிள்ளை நன்றியுரை நிகழ்த்தினார்.



லெப். இளமாறன்
(சூரியகுமார்)

மணலாறு கொக்குத்தொடுவாயில் நேற்றுமுன்தினமிரவு 7 30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலில் இரண்டு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த கப்டன் முத்துச்செல்வன் / ஆனந்தகுமார் [குஞ்சன் மதியழகன், ஆலங்கேணி, பூநகரி], லெப்டினன்ட் இளமாறன் / சூரியகுமார் (தேவராசா சதீஸ்தரன் ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

வரணபம்

நேர அட்டவணைப்படி வழங்கப்படும் என்றும் மேலும் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு—
12 - 01 - 93 முதல்
13 - 01 - 93 வரை

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு—
15 - 01 - 93

குண்டுவீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல் பற்றியும் தலைவர் பிரபாகரன் ஆங்கிலத் திருச்சபையின் ஆயரிடம் எடுத்து விளக்கினார்.

பூநகரிப் பாதையைத் திறந்துவிடும் விவகாரம் பற்றி கலந்துரையாடியபொழுது சமாதான சூழலை உருவாக்கும் நல்லெண்ண முயற்சியாக அரசாங்கம் பூநகரியிலுள்ள படைகளை வாபஸ்பெற்று பாதையைப் பொதுமக்களுக்குத் திறந்துவிடவேண்டும் என தலைவர் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணக்குடாநாட்டிற்கான தரைவழிப் பாதைகளை இராணுவம் தடைசெய்திருப்பது புலிகளின் போக்குவரத்தைப் பாதிக்கவில்லை என்றும் பொதுமக்களே இதனால்பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

கிளாலிப் பாதையூடாக மக்கள் எதிர்கொள்ளும அவலங்களை தாம் நேரில் கண்டறிந்ததாக எடுத்துக்கூறிய ஆயர் வண. பெர்னாண்டோ மக்கள் பாதுகாப்பாகப்பயணம்செய்ய வழிவகை செய்யுமாறு தாம் அரசை வற்புறுத்தடபோவதாகத் தெரிவித்தார்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு—
16 - 01 - 93

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
## யாழ்ப்பாணக் கிளைத் தலைமையகம்
# பயிற்சி நெறிகள் - 1993

கீழ்வரும் இலவச பகுதி நேர பயிற்சி நெறிகள் யாழ். கிளைத் தலைமையகத்தில் நடாத்தப்படவுள்ளன. பயில விரும்புவோர், குறைந்தது க. பொ. த. சாதாரண பரீட்சையில் கீழ்வரும் ஒவ்வொரு பயிற்சி நெறியின் அருகிலுள்ள அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளபாடங்கள உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து | (தமிழில் திறமைச் சித்தி) |
| ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து | (ஆங்கிலத்தில் திறமைச்சித்தி) |
| பத்திரிகையாளர் பயிற்சி | (தமிழ், ஆங்கிலம், கணிதம் - சித்தி) |
| சமூகநலனும் சமுதாயசேவையும் | (தமிழ், ஆங்கிலம், கணிதம் - சித்தி) |
| முதல் - உதவி | (சுகாதாரம் - சித்தி) |
| ஆரம்ப சுகாதாரம் | (சுகாதாரம்/சமூகவியல் சித்தி, உதவித் தாதி பயிற்சி பெற்றோருக்கு முன்னுரிமை) |
| உதவித் தாதி | (சுகாதாரம் - சித்தி) |
| மருந்தாளர்பயிற்சி. DispensersCourse. | (தமிழ்,ஆங்கிலம்,விஞ்ஞானம்,கணிதம் சித்தி) |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

விண்ணப்பங்களைத் தாம் வதியும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுத் தலைவரின் சிபார்சுடன் எமக்கு 20-01-93க்கு முன்பாக அனுப்பி வைக்கவும். இதற்காக 23-01 93 முற்பகல் 9 00 மணிக்குத் தலைமையகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குச் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும். 30-01-93இல் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகும்.

தையல் பயிற்சி: மேற்படி தையல் பயிற்சி இலவச வகுப்புகள் ஒவ்வொரு பிரிவிலும் ஆரம்பமாகவுள்ளன. இதில் பயில விரும்புவோர் பிரிவுக் காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
08-01-1993

செஞ்சிலுவைச் சங்கச் சேவையில்,
கௌரவ செயலாளர்

(சி-5750)

பம்பாயில் இடம் பெற்றுவரும் இந்து - முஸ்லிம் இனக் கலவரங்களால் 115 பேர் பலியாகியுள்ளனர். பலர் படுகாயம்

சிவசேனா, பாரதீய ஜனதா கட்சி என்பன முன்னனின்று நடாத்துவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் முஸ்லிம்கள் பாகிஸ்தானிலிருந்து ஆயுதங்களைப் பெற்று அந்த ஆயுதங்களின் மூலம் இந்துக்களை தாக்குகின்றனர் என சிவசேனா அமைப்பின் தலைவர் போல் தங்கரே அறிவித்துள்ளார்.

நாளை

பேரணிக்கு தமிழீழ காவல் துறையினரின் கிளிநொச்சி கோட்ட காவல் துறையினர் பாதுகாப்பு அளிக்க உள்ளனர்.

(16)

# 41-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்: 10 — 02 — 1977



வீரச்சாவு: 02 — 12 — 1992

## லெப். செல்வம்
(பாக்கியநாதன் செல்வநாதன்)

சுதந்திரம்வேண்டி நடந்திடும் யாகத்தில்
சுடுகலன் ஏந்தி போர்க்கணை தொடுத்தவனே
இதந்தரும் மனைதனை நீக்கி போர்க்களம் புகுந்து
இலட்சியப்போரில் வீரச்சாவெய்தியவனே! வீரவணக்கம்

உடுவில் தெற்கு,
சுன்னாகம். (3976) - குடும்பத்தினர்

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 10.01.1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7936

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-5703, 26-7068, 28-0278, 41-9396, 42-3726, 26-6568, 26-1343. 26-7525, 28-4550, 26-4568, 26-4957, 28-9186, 42-7312, 28 8678, 41-9759, 41-8823, 26-3294, 27-1192, 24-7078, 42-0266, 42-1721, 28-3528, 24-0192, 26-1349

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4323, 22-6005, 24-8558, 27-5717, 28-1085, 22-6897, 27-7952, 24-7356, 26-6264, 24-6699, 24 9489, 24-5241, 25-9597, 26-5870, 40-7583, 26-8746, 28-2829, 27-8754, 27-6579, 24-6439, 28-0799, 26-4885, 41-6686, 42-1325